அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 50/90(111)

எனது இல. 11/1111-44(வீ),
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 7.
1992. செப்ரெம்பர் 25 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் முதல் செயலாளர்கள்,
அரசாங்க அதிபர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
ஆளுநர்களின் செயலாளர்கள்.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் ஓய்வூதியம்
பெறுநர்களுக்கும் மேலதிகப்படி வழங்குதல்

1990.11.29ஆந் திகதியிடப்பட்ட 50/90ஆம் இலக்க, 1991.12.25 ஆந் திகதியிடப்பட்ட 50/90(1) ஆம் இலக்க, 1992.03.26ஆந் திகதியிட்ட 50/90(11)ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளுக்கு மேலதிகமானது.

02. 1989.12.27ஆந் திகதியிட்ட 63/89ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நியதிகளின்படி 200/- ரூபா மாதாந்தப் படியை அல்லது 1990.11.29ஆந் திகதியிட்ட 50/90ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நியதிகளின்படி 300/- ரூபா மாதாந்தப்படியை உத்தியோகத்தரொருவர் பெற்றுக்கொண்டிருந்தால்/ பெற உரித்துடையவராகவிருந்திருந்தால் பதவியுயர்வு பெற்றதன் மீது அவருடைய சம்பளம் திருத்தப்பட்ட பின்னரும்கூட அப்படியை அவர் தனக்குரியதாகத் தொடர்ந்தும் பெறுவதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும்.

03. உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட படிகளில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தால் 1991.12.01ஆந் திகதி தொடக்கம் செயல் வலுவிலுள்ள உரித்துத் திருப்பி வழங்கப்படல் வேண்டும்.

04. தொடக்க இணைந்த மாதச் சம்பளமாக 3000/-ரூபாவை அல்லது அதற்குக் குறைந்த தொகையை உடைய சம்பளத் திட்டமொன்றிலுள்ள சகல அரசாங்க/ உள்ளூராட்சிப் பணியாளர்கள் 1992.01.09ஆந் திகதியிட்ட 01/92ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி 100/-ரூபாவினைக் கொண்ட படியைப் பெறுவதற்கு உரித்துடையவராவர். ஓய்வூதியம் பெறுநர்களின் குறைக்கப்படாத ஓய்வூதியம் 3000/-ரூபாவாக அல்லது அதைவிடக் குறைவானதாகவிருந்தால் அவர்களுக்கும் இப்படி வழங்கப்படல் வேண்டும்.

05. இச்சுற்றறிக்கை திறைசேரியின் ஒருப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: எம். என். ஜுனைட்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,